1969 ஆகஸ்ட் 16]

குழுக்களை அமைப்பதற்கான செயற்குறிப்பு ஒன்று தயாரிக்கப்பட்டு, தனது ஒப்புதலுக்காக அனுப்பப்பட வேண்டுமென்று முடிவு செய்துள்ளது.

(இ) பண்டங்கள் கொள்முதல் குழுவில் அரசாங்கச் சார்பற்ற அதிகாரிகளைச் சேர்ப்பது பற்றி, அந்தக் குழு அமைக்கப்படும் பொழுது மின்சார வாரியத்தினுல் ஆலோசிக்கப்படும்.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குழுவின் முன்பாக வைக்கப் போவதாகத் தெரிவித்தார்கள். எவ்வளவு விரைவிலே அந்தக் குழு அமைக்கப்படும், எப்பொழுது அது நடைமுறையில் வரும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: கூடிய விரைவிலே ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்படும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: தலைவர் அவர்களே, கொள்முதல் குழு என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கேள்வியிலே அதுதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கொள்முதல் குழுவில் யார் யார் இருக்கிறார்கள், யார் யாரைச் சேர்த்துக்கொள்ள அரசாங்கம் யோசிக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: இப்பொழுது எலக்டிரிசிடி போர்டிலே அங்கங்கே இருக்கிற எஸ். ஈக்களைச் சேர்த்துக்கொள்ளுகிறார்கள். சீப் இன்ஜினியரையும் சேர்த்துத்தான் இப்பொழுது நடந்து வருகிறது. அரசாங்க சார்பற்றவர்களை சேர்க்க வேண்டுமென்பதுதான் இப்பொழுதுள்ள கேள்வி. அதை அரசாங்கம் பரிசிலித்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து மின்சார வாரியத்தின் வரவு-செலவுத் திட்டத்தின்மீது விவாதம் நடைபெற இருப்பதால் மேற்கொண்டு துணைக் கேள்விகள் தேவையில்லையென்று நான் நினைக்கிறேன்.

வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் அளிப்பார்கள்.

3. முதலமைச்சர் விளக்கம்.

மத்திய போலீஸ் துறை பற்றிய வினுவிற்கு அளித்த விடைகுறித்து

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி: மத்திய போலீஸ் துறை மாநிலத்திற்கு வருவது பற்றி கேள்விகள் கேட்ட நேரத்தில் ஒரு கேள்விக்கான பதிலை நான் தந்தது குறித்து ஒரு விளக்கம் தர

விரும்புகிறேன். மத்திய போலீஸ் மாநிலத்திற்கு வந்ததற்குப் பிறகு அதனுடைய கண்ட்ரோல் யாரிடம் இருக்கிறது என்ற கேள்வியின் அடிப்படையில் நிர்வாகம் மத்திய போலீசிடத்திலே இருக்கிறது. கண்ட்ரோல மாநிலத்திற்கு வந்தபிறகு நமக்குத் தான் இருக்கிறது என்ற குறிப்பை தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன்.

4. அறிவிப்புகள்.

(i) மதுரைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஒரு அறிவிப்பு. மதுரைப் பல்கலைக் கழகத்தில் ஆட்சிக் குழுவில் (Senate)-ல் இப் பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருந்த (1) திரு. ஆர். பொன்னப்ப நாடார், (2) திரு. மு. ச. சிவசாமி, (3) திரு. ம. பொ. சிவஞானம், (4) திரு. நா. சௌந்திரபாண்டியன் ஆகியோரின் பதவிக் காலம் 7-8-1969-ல் முடிவுற்றதால் ஏற்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக, தமிழ் நாடு சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து நால்வரை தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு மதுரைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் விதிமுறைப்படி பகுதிவாரி அடிப்படையில் (proportional representation-ல்) இத்தேர்வு நடைபெறுவது இல்லை.

எனவே, வேட்பாளர்கள் நியமனப் பத்திரங்களை 20-8-1969 புதன்கிழமை மாலை 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 21-8-1969 வியாழக்கிழமை, காலை 11 மணிக்கு பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பு கிற வேட்பாளர்கள் 22-8-1969 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக் குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது நான்கு இடங்களுக்கு மேற்படுமாயின் 23—8—1969 சனிக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே, சென்னை, கோட்டையில் இருக்கும் உறுப்பினர் ஓய்வு அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

(ii) பேரவை அலுவல் ஆய்வுக் குழுவிற்கு நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னொரு அறிவிப்பு. பேரவை அலுவல் ஆய்வுக் குழுவில் திரு. எ. கோவிந்தசாமி அவர்களின் மறைவினால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு, சட்டப் பேரவையின் 193 (4) விதியின் கீழ், மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன், பேரவை முன்னவர் அவர்களை நான் நியமிக்கிறேன். அவர்களை இப்பொழுது நடக்கவிருக்கும் அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.